செ.வெ.எண்-17 நாள்-08.10.2018

# அரியலூரில் வன உயிரின வார விழாவில் மாண்புமிகு தமிழக அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் பங்கேற்பு.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு கலைக்கல்லூரி அரங்கத்தில் வனத்துறையின் சார்பாக வன உயிரின வார விழா 2018 மாண்புமிகு தமிழக அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலையில் இன்று (08.10.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழக அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வன உயிரின வார விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் வினாடிவினா போட்டிகளில் வெற்றிப்பெற்ற பள்ளி, கல்லூரிச்சேர்ந்த 27 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி பேசியதாவது :-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழக மக்களின் நலன் காக்க ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, கல்வித்துறைக்கு அதிக நிதிஒதுக்கீடு செய்து பள்ளிக்கல்வி மற்றும் கல்லூரிக்கல்வி வளர்ச்சிக்கும், மாணவ, மாணவியர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவில் வன உயிரின வார விழா 1952ஆம் ஆண்டு முதல் வருடம் தோறும் அக்டோபர் மாதத்தில் 2-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை கொண்டாடப்படுகிறது.

1953ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் காந்தி பிறந்த அக்டோபர் 2ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரை வன உயிரின வார விழா இந்தியா முழுவதும் நடத்திட ஆணையிடப்பட்டு, கொண்டுடாடப்படுகிறது.

மாணவ, மாணவியர்கள் கற்கும் பருவத்தில் வன உயிரினங்களை பற்றி அறிந்து கொள்ளவும் பேச்சுப்போட்டி மற்றும் ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டும் போட்டி ஆகியவை நடத்தப்பட்டது. நமது தேசப்பிதா மகாத்மா காந்தி ஓர் அகிம்மைவாதியாதலால், அவரை நினைவு கூறும் வகையில் அவர் பிறந்தநாளான அக்டோபர் 2-ம் தேதி இவ்விழா ஆரம்பிக்கப்பட்டு 8-ம் தேதி முடிக்கப்படுகிறது.

வன உயிரினங்கள் யானை, சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, மான், நரி மட்டுமல்ல, பறவை இனங்கள், வண்ணத்துப்பூச்சி இனங்கள், தேனிகள், பாம்புகள் இனங்கள், குளவிகள், வண்டு இனங்கள், கண்ணுக்கு தெரியாத ஏராளமான நுண்ணுயிர்கள் முதலியவை அடங்கும். எனவே, மேறகண்ட உயிரினங்களை பாதுகாப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு, இயற்கைச் சூழல் மேம்படுத்துவது அவசியம், ஏனெனில் அவை நம் உயிர் சூழல் தொகுப்பின் ஓர் அங்கமாகும். எனவே, மக்கள் வன உயிரினங்களை பாதுகாத்தும், அவற்றின் வாழ்விடங்களான தாவரங்களை நாம் பேணி பாதுகாப்பது நமது கடமையாகும். சுற்றுசூழலை பாதுகாப்பதோடு வன வளங்களை மேம்படுத்த வேண்டும். மரம் வளர்ப்பதால் நம் நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை பயக்கும்.

வன உயிரின வார விழாவையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டுகிறேன் என மாண்புமிகு தமிழக அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்.

பின்னர், அரசு கலைக்கல்லூரியில் உயிரின வார விழாவையொட்டி மரக்கன்றுகளை மாண்புமிகு தமிழக அரசு தலைமைக்கொறடா அவர்கள் நட்டு வைத்தார்கள்.

இவ்விழாவில், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் நா.சத்தியநாராயணன், வன அலுவலர் (பொ) த.இளங்கோவன், அரசு கலைக்கல்லூரி முதல்வர் பெ.பழனிச்சாமி, வனச்சரக அலுவலர் இரா.கமார், வன காப்பாளர், சரகப்பணியாளர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவி, மாணவியர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**